# யோனத்தான்: தேவையில் உதவிய ஒரு நண்பர்

## [1 சாமுவேல் 17–23; 2 சாமுவேல் 1]

*ஆங்கில மொழியில் "friendship" என்ற வார்த்தையும், தமிழ்மொழியில் அதற்கிணையான நட்புறவு என்ற வார்த்தையும் மிகவும் விலையேறப் பெற்ற வார்த்தைகளில் ஒன்றாக உள்ளன. இராபர்ட் லூயிஸ் ஸ்டீவென் ஸன் அவர்கள், "ஒரு நண்பர் … என்பவர் உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளக் கூடிய வெகுமதியாக இருக்கின்றார்"[1] என்று கூறினார். மேரி மிட் ஃபோர்ட் அம்மையார், "என் அன்றாட உணவைக் காட்டிலும் என் நண்பர்களுக்காக நான் தேவனுக்கு அதிக நன்றியைச் செலுத்துகின்றேன் - ஏனெனில் நட்புறவு என்பது இருதயத்திற்கு உணவாக உள்ளது" என்று கூறினார்கள். நட்புறவை எடுத்துப்போடுதல் என்பது சூரியனை உலகத்திலிருந்து களவு செய்வது போன்றதாக உள்ளது என்று சிசெரோ என்பவர் தமது கருத்தைப் பராமரித்தார். நீதிமொழிகள் என்ற நடைமுறைப் புத்தகமானது நட்புறவைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: "சிநேகிதன் என்பவன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" (நீதி. 17:17). "சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு" (நீதி. 18:24). "உன் சிநேகிதனையும் … விட்டு விடாதே" (நீதி. 27:10).*

*"நட்புறவு" என்ற வார்த்தையை நான் கூறுகிற பொழுது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கின்றீர்கள்? ஒருவேளை நீங்கள் நீண்ட காலமாக அறிந்துள்ள, நீங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ஒருவரைப் பற்றி நினைக்கலாம். ஒருவேளை உங்கள் வாழ்வில் திருப்புமுனையாயிருந்த இரக்கம் மற்றும் அக்கறையைக் காண்பித்த ஒருவர் உங்கள் மனதில் நினைவுக்கு வரலாம். ஒருவேளை உங்கள் குடும்பத்து உறுப்பினர்களில் ஒருவர் உங்களுக்கு இரத்த சம்பந்தமான உறவினர் என்பதைக் காட்டிலும் மேலானவராயிருத்தல் உங்களின் நினைவுக்கு வரலாம். "நண்பர்" என்ற வார்த்தையை நான் கேள்விப்படுகின்ற பொழுது, முதலாவது நான் எனது மனைவியாகிய ஜோ - வையே நினைத்து பார்க்கின்றேன் - இவர்கள் இந்த பூமியில் எனது மிகச் சிறந்த நண்பராயிருக்கின்றார்கள் (உன்னதப்பாட்டு 5:16ஐக் கவனிக்கவும்). பின்பு நான் எனது பெற்றோர்கள், எனது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் எல்லாரையும் நினைக்கின்றேன். பின்பு நான் உலகம் முழுவதிலும் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நண்பர்களைப் பற்றி நினைக்கின்றேன். என்னைப் பொறுத்த*

*மட்டில், எல்லாருக்கும் மாபெரும் நண்பருடைய அன்பினால் சூழப்பட்டு, நம் எல்லா நண்பர்களும் ஒரு இடத்தில் ஒருவேளையில் கூடியிருத்தல் என்பது பரலோகத்தின் மகிழ்வுகளில் ஒன்றாயிருக்கும்.*

*நான் "நட்புறவு" என்ற வார்த்தையைக் கூறும் பொழுது, துரதிர்ஷ்ட வசமாகச் சிலர், ஒருவரையும் நினைக்காதவர்களாய் இருப்பார்கள்.[2] உங்களைப் பொறுத்தமட்டில் விஷயம் அவ்வாறு இருந்தால், என் இருதயம் உங்களுக்காக இரத்தம் சிந்துகிறது. இந்தப் பாடமான இதைப் படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் உதவியாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன்; சிறப்பாக, நீங்கள் நட்புறவு இன்மையை உணர்ந்தால், உங்களுக்கு உதவுவதற்காகச் சில விஷயங்கள் கூறப்படும்.*

*நான் கேள்வியை மாற்றிக் கேட்கின்றேன். "நட்புறவு மற்றும் வேதாகமம்" என்று நான் கூறுகின்ற பொழுது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கின்றீர்கள்? ஒருவேளை நீங்கள் தாவீதைப் பற்றியும் யோனத்தானைப் பற்றியும் நினைத்திருக்கலாம். நமது பிள்ளைகளின் வகுப்புக்களில் நட்புறவைப் பற்றி அவர்கள் படிக்கின்ற வேளையில், நட்புறவு என்ற கருத்தை விவரிப்பதற்கு, எவ்வித வேறுபாடுமின்றி, ராஜாவாயிருந்த சவுலின் மகனுக்கும் பெத்லெகேமில் ஒரு ஆடு மேய்க்கும் பையனாயிருந்த தாவீதுக்கும் இடையில் இருந்த நட்புறவு பற்றிய வரலாறு தேர்ந்து கொள்ளப்படுகிறது.*

*இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் நாம், தாவீது திடீரென்று கொண்டாடத் தக்கவரான வேளையில், மற்றும் அவர் திடீரென்று அழிக்கப்படத் தேடப்பட்டவராகையில், நடந்த நிகழ்வுகளில் அவரைக் காண்போம். இருப்பினும், இந்தப் பாடத்தில் நாம், இவ்வேத வசனப் பகுதியினூடே இழைகின்ற பொன் நூல் ஒன்றைக் கண்ணோக்கு வோம்: தாவீதின் மீது யோனத்தானின் அன்பு. நாம் உண்மை அன்பின் இயல்பைப் பற்றிக் கற்றுக் கொள்வோம்.*

## *நட்புறவின் உறுதிப்பாடு (1 சாமுவேல் 17:55-18:3)*

*இந்தப் பாடத்தின் பின்னணியானது, நாம் கோலியாத்தின் மீது தாவீதின் வெற்றியை நினைவு கூருகையில், 1 சாமுவேல் 17ம் அத்தியாயத்தின் கடைசி நான்கு வசனங்களில் காணப்படுகிறது. அந்த இராட்சதனை எதிர்த்து நிற்க தாவீது சவுலை விட்டுச் செல்லுகையில், ராஜா தமது சேனைகளின் தளபதியிடம், "அப்னேரே, இந்த வாலிபன் யாருடைய மகன்?" (17:55) என்று கேட்டார். தாவீதின் வெற்றிக்குப் பின்பு, அந்த இளம் (ஆட்டு) மேய்ப்பனை அப்னேர், ராஜாவுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினார். அங்கு தாவீது தமது கைகளில், கோலியாத்தின் தலையுடன் நிற்கையில், ராஜா அவரிடம் "வாலிபனே, நீ யாருடைய மகன்?" (17:58அ).[3] என்று கேட்டார். அதற்கு தாவீது, "நான் பெத்லெகேம் ஊரானாயிருக்கிற உம்முடைய அடியானாகிய ஈசாயின் மகன்" (17:58ஆ) என்று பதில் அளித்தார். சவுல் தாவீதை யார் என்று கேட்கவில்லை, ஆனால் அவருடைய*

*(தாவீதின்) தந்தை யார் என்றுதான் கேட்டார் என்பதைக் கவனியுங்கள்.[4] அநேகமாக சவுல், தாவீதைத் தமது வீட்டாருடன் சேர்த்துக் கொள்வதற்கு தாவீதின் தந்தையிடம் அனுமதி கேட்பதற்காக இந்தத் தகவலைப் பெற விரும்பியிருக்கலாம். "சவுல் அவனை அவன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப் போக ஒட்டாமல், அன்றுமுதல் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான்" (18:2).[5]*

*சவுல் தமது அரண்மனையில் வந்த வசிக்கும்படி தாவீதுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தபோது ராஜாவின் அருகில் நின்று அதை ஒரு இளைஞர் கேட்டுக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் பெயர் யோனத்தான் என்பதாகும் (யோனத்தான் என்றால் "யெகோவா கொடுத்தார்" என்று அர்த்தப் படுகிறது). இவர் சவுலின் மூத்த மகனாகவும் அவரின் அரியணைக்கு உரியவராகவும் இருந்தார். இவர் ராஜாவின் வலது கரம் போன்ற மனிதராக, இஸ்ரவேலின் ஒவ்வொரு திசையிலும் இருந்து வெறுப்புமிக்க இனங்களுடனான பல யுத்தங்களில் தம் திறமையை நிரூபித்திருந்த வீரமிக்க சேனைத்தலைவராக இருந்தார் (1 சாமு. 13; 14). இவர் இஸ்ரவேலர்களின் இருதயங்களில் ஒரு விசேஷித்த இடத்தைப் பெற்றிருந்தார் (1 சாமு. 14:45).*

*தாவீது இராட்சதனை எதிர்த்து நின்றதையும், பின்பு பள்ளத்தாக்கின் மீதான குன்றுப் பகுதியில் சவுலைச் சந்தித்ததையும் யோனத்தான் கவனிக்கையில், ஏதோ சில விஷயங்கள் - அரிதான மற்றும் அழகுமிக்கவை - நடைபெற்றன. "அவன் சவுலோடே பேசி முடித்த பின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்" (18:1). "இசைந்திருந்தது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது "முடி போடப்பட்டிருத்தல்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. உடனடியாக அவர்களின் உயிர்கள் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்ட நிகழ்வு நடந்தது, ஆனால் அதற்கும் மேலாக, ஒரு பிணைப்பு நிலைநாட்டப்பட்டது.* NIV*யில், "யோனத்தான் தாவீதுடன் ஒரே ஆவியை உடையவரானார்" என்றுள்ளது. இவ்விதமாக, உலகம் அறிந்தவற்றிலேயே மிகவும் அழகிய நட்புறவுகளில் ஒன்று பிறந்தது.*

*இது நடக்க முடியாத ஒரு நட்புறவாக இருந்தது. முதலாவது, இவர்களின் வயதுகளில் குறைந்தது இருபது ஆண்டுகள் வித்தியாசம் இருந்தது. தாவீது பிறந்தபொழுது, யோனத்தான் ஏற்கனவே ஒரு பயிற்சியும் பக்குவமும் கொண்ட போர் வீரராயிருந்தார். இரண்டாவது, இவர்களின் சமூக அந்தஸ்தில் வித்தியாசம் இருந்தது. யோனத்தான் அரியணையில் அமரும் வரிசையில் அடுத்திருப்பவராக இருந்தார். ஆனால் தாவீது, பெத்லெகேமில் இருந்து வந்த ஒரு ஏழை விவசாயியின் மகனாயிருந்தார். இருப்பினும் ஒருவர், அன்பு நிறைந்த ஆவியைச் சந்திக்கும் பொழுது, இப்படிப்பட்ட மேலோட்டமான விஷயங்கள் ஒரு பொருட்டாக மதிக்கப்படுவதில்லை. இன்றைய நாட்களின் சமுதாயத்தில், நாம் மிக அதிகமான தலைமுறை இடைவெளிகளையும் சமூக இடைவெளிகளையும் உண்டாக்கிக் கொண்டுள்ளோம். நாம் நமது சொந்த வயதை ஒத்தவர்*

*களிடத்திலும், நம்மைப் போன்றவர்களிடத்திலும் மட்டும் நண்பர்களை நாடுவோம் என்றால், நாம் எவ்வளவு அற்புதமான நட்புறவுகளைத் தவற விட்டவர்களாவோம்!*

*யோனத்தானும் தாவீதும் ஒருவருக்கொருவர் ஏற்படுத்திக் கொண்ட உறுதிப்பாட்டைக் கவனியுங்கள்: "யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்" (18:3). உடன்படிக்கை என்பது, இருசாராருக்கிடையிலான ஒப்பந்தமாக உள்ளது.[6] ஏனெனில் யோனத்தான் முதலில் தாவீதுடன் நெருக்கமான நட்புறவை உணர்ந்தார் என்பதாலும், தாவீதுக்கு அவர் (யோனத்தானை விடவும்) கீழ்ப்பட்டவராயிருந்ததினால், இந்த நட்புறவு தகுதியற்றதாகக் காணப்பட்டதாலும், இந்த உடன்படிக்கை யோனத்தானால் ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தது.[7] இருப்பினும், இவ்வார்த்தையின் இயல்பானது இவர்களின் நட்புறவு ஒருதலைப் பட்சமாயிருந்ததில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது; தாவீதும் யோனத்தான் மீது அன்பு கூர்ந்தார் (1 சாமு. 20:41; 2 சாமு. 1:26; முதலியன).*

*இந்த உடன்படிக்கையில் அடங்கியிருந்தவை என்ன? இதில் உடைமைகள் பரிமாறிக் கொள்ளப்பட்ட விரிவான சடங்கு, ஒரு பண்டிகை மற்றும் இரத்தம் ஒன்று கலக்கப்படுதல் ஆகியவை அடங்கியிருந்ததாக சிலர் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். (ஒருவேளை, உங்களில் சிலர் உங்களையும் உங்கள் நண்பரையும் "இரத்த சம்பந்தமான சகோதரர்களாக்குவதற்காக" கட்டை விரல்களில் கீறிக் கொண்டு அவற்றை ஒன்றாக அழுத்துதல் என்ற சிறு பிள்ளைத்தனமான சடங்கில் பங்கேற்றிருக்கலாம்.) இருப்பினும், இது வாக்குறுதிகளைப் பரிமாறும் நிகழ்வாக இருந்திருக்கவே அதிக வாய்ப்பு உள்ளது (1 சாமு. 20:16ஐக் காணவும்). அதாவது, எப்பொழுதுமே நண்பர்களாய் இருப்போம் என்று (கர்த்தருடைய நாமத்தினாலே[8]) உறுதிப்படுத்துதல்.*

*இந்த உடன்படிக்கை எந்த வடிவைக் கொண்டிருந்தாலும், இது உறுதிப்பாட்டை உள்ளடக்கியதாக இருந்தது. உண்மையான நட்புறவு எப்பொழுதுமே உறுதிப்பாட்டை உள்ளடக்குகின்றது, அது பேசப்பட்டாலும் அல்லது பேசப்படா விட்டாலும் - வலிவு மற்றும் மெலிவினூடே நண்பர்களாயிருத்தல் என்பது இதில் உள்ளடங்கியிருக்கின்றது. மேலும், உண்மையான நட்புறவில், அந்த உறுதிப்பாடு சீராகப் புதுப்பிக்கப்படுகின்றது. தாவீது மற்றும் யோனத்தானின் வரலாற்றை நாம் தொடர்ந்து காண்கையில், அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் உடன்படிக்கையை அடிக்கடி மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதைக் காண்போம்:*

> *இப்படி யோனத்தான் தாவீதின் குடும்பத்தோடே உடன்படிக்கை பண்ணி, "தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக" என்று சொல்லி, யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால், பின்னும் அவனுக்கு ஆணையிட்டான்; தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான் (1 சாமு. 20:16, 17).*

*அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி, ... அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணின பின்பு ... (1 சாமு. 23:16, 18).*

*சாமுவேல் ஜான்ஸன் என்பவர், "ஒரு மனிதர் தம் நட்புறவுகளை தொடர்ந்து பழுதுபார்த்து வைத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். நட்புறவை ஒருக்காலும் சலுகைக்கென்று எடுத்துக் கொள்ளாதீர்கள். நட்புறவு அவ்வப்பொழுது மறுவலிவூட்டப்பட வேண்டும். இது நாம், வியாபாரக் கூட்டாளிகள் இருவர், மீன்பிடிக்கும் இருவர், அல்லது கணவரும் அவர் தம் மனைவியும் என்று யாரைப் பற்றிப் பேசினாலும் உண்மையாக உள்ளது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சியொன்றில், ஒவ்வொரு கணவரும் தம் மனைவி "மீண்டும் தன்னை அவர் திருமணம் செய்து கொள்வார் என்று அறியச் செய்வதற்காக" அவளுக்கு விலையுயர்ந்த வைர நகை ஒன்றை வாங்கும்படி வற்புறுத்திற்று. வைர அலங்கார நகை அல்ல ஆனால் உங்கள் அன்பை மீண்டும் உறுதிப் படுத்துதல் என்பதுதான் இன்றியமையாததாக உள்ளது.*

## *நட்புறவின் சுயநலமின்மை (1 சாமுவேல் 18:4)*

*யோனத்தான் தாவீதுடன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்ட பின்பு, "யோனத்தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும் தன் வில்லையும், தன் கச்சையையும் கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்" (18:4). இந்தச் சடங்கு இதற்கு முன் நடந்திராததாக இருந்தது. உடைகளும் ஆயுதங்களும் யோனத்தானின் இராஜரீக அலமாரிக்கு உரியவைகளா யிருந்தன. ஆயுதக் கருவிகளும் விசேஷித்த தனிச் சிறப்புடையவைகளா யிருந்தன. பட்டயமானது இஸ்ரவேலின் படை முழுவதிலும் இருந்த ஒரு சிலவற்றில் ஒன்று என்ற தகுதி பெற்றிருந்தது.[9] வில் என்பது யோனத்தானின் தனிப்பட்ட அடையாளமாயிருந்தது (1 சாமு. 20:20 முதல்; 2 சாமு. 1:17, 18, 22). இந்த வைபவமானது வெளியரங்கமான ஒன்றாக இருந்திருந்தால் (இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று காணப்படுகின்றது), அங்கிருந்த சவுலும் மற்றவர்களும் திகைப்புற்று கலக்கமடைந்திருப்பார்கள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை.*

*யோனத்தான் இவற்றைத் தாவீதுக்குக் கொடுத்தது ஏன்? ஒருவேளை பல்வேறு நோக்கங்கள் உள்ளடங்கியிருந்திருக்கலாம். தாவீதுக்கு படை யினர் அணியும் உடைகளும் ஆயுதங்களும் தேவை என்று யோனத்தான் உணர்ந்திருக்கலாம். தாவீது தம் தந்தையின் இல்லத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படாததால் (1 சாமு. 18:2), அவர் தாம் அணிந்திருந்த உடையை மட்டுமே தம்மிடம் வைத்திருந்தார்.[10] மீண்டுமாக, இந்த வைபவமானது யோனத்தானுக்கும் தாவீதுக்கும் இடையில் ஏற்படுத்தப்*

*பட்ட உடன்படிக்கையை முத்திரையிடுவதின் ஒரு பாகமாயிருக்கக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது (1 சாமு. 18:3).[11]*

*இருப்பினும், இந்தக் கொடைகளுக்கு இன்னும் ஆழமான தனிச் சிறப்பு உள்ளது என்று நான் நினைக்கிறேன். கோலியாத்துடனான யுத்தத்திற்கு நாம் திரும்புவோம். தர்க்கரீதியாகப் பார்த்தால், சவுல்தான் கோலியாத்துடன் யுத்தம் செய்ய வேண்டியவராயிருந்தார், ஆனால் அவர் பயந்திருந்தபடியால் அதைச் செய்யவில்லை. தர்க்கரீதியாக இவருக்கு அடுத்து அதைச் செய்திருக்க வேண்டியவர் யார்? யுத்தத்தில் தம்மைத் தனிச் சிறந்தவராக்கி, வீரத்திற்கும் தைரியத்திற்கும் பெயர் பெற்றவராயிருந்தவர் யார்? யோனத்தான் அல்லவா? யோனத்தான் ஏன் அந்த இராட்சதனை எதிர்த்து நிற்கவில்லை? அவரும் தமது தந்தை மற்றும் அங்கிருந்த எல்லாரையும் போல் பயத்தினால் செயல்பட இயலாதவராகியிருந்தாரா? இது யோனத்தானின் இயல்புக்குப் பொருத்தமானதாயிருக்கவில்லை. மாறாக, யோனத்தான் தமது தந்தை மீது கொண்டிருந்த மரியாதையை இழந்து நின்றார் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது;[12] அவர் தமது தந்தைக்குப் பதிலாகத் தாம் அரியணையில் அமரும் நம்பிக்கை கொண்டிருந்ததில்லை; உண்மையில் அவர் இஸ்ரவேல் நாட்டின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை இழந்து நின்றார்; எனவே அவர் பயத்தினால் அல்ல ஆனால் நம்பிக்கையிழந்த நிலையினாலேயே முடக்கப்பட்டார். இருப்பினும், அந்தப் பெலிஸ்தனை எதிர்த்து நிற்க தாவீது பள்ளத்தாக்கினுள் அடியெடுத்து வைத்து இறங்கியபோது யோனத்தானின் இருதயத்தில் நம்பிக்கை உயிர்ப்பிக்கப்பட்டது. தாவீதைப் பற்றி இவர் இன்னும் அதிகமாக அறிந்து கொண்டபோது, நம்பிக்கை நிச்சயமானதாயிற்று. இதோ இங்கு அரியணைக்குத் தகுதியான ஒருவர், இஸ்ரவேலின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஒருவர் இருந்தார்!*

*இந்தப் பரிசோதனை முழுவதும் சரியானதாயிருந்தால், யோனத்தானின் கொடைகளில் அடையாளத்துவமான தனிச் சிறப்பொன்று இருந்தது. உண்மையில் தாவீதிடம் யோனத்தான், “அரியணைக்கான என் உரிமையை விட்டு விடுகின்றேன், உனக்காக என் ஆதரவை உறுதிப் படுத்துகின்றேன்!” என்றுதான் கூறினார். இந்தச் சடங்கிற்கான இவ்விளக்கமானது யோனத்தான் மற்றும் தாவீதுக்கு இடையில் இருந்த உறவில் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளுடன் சீர்பொருந்துகின்றது (1 சாமு. 23:17 முதலியன). இது யோனத்தானுக்கு என்ன விலை செலுத்த வேண்டியதாயிருந்திருக்கும் என்பதை பாராட்டாமல் இருக்க முடிவது என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. இந்த நடவடிக்கையில் காட்சிப் படுத்தப்பட்ட சுயநலம் இல்லாமை என்பது வேதவாக்கியங்களிலோ அல்லது வாழ்விலோ மிகவும் அரிதாகவே போலச் செய்யப்படுகின்றது.*

*சுயநலமின்மை என்பது நட்புறவின் இயல்பான பாகமாக உள்ளது. கொடுத்தல் என்பது இல்லாமல் உண்மையான நட்புறவு இருக்க இயலாது. பின்னாளில் தாவீதிடம் யோனத்தான், “உமது மனவிருப்பம் இன்னதென்று சொல்லும், அதின்படி உமக்குச் செய்வேன்” (1 சாமு. 20:4) என்று கூறினார். உண்மை நண்பர்கள் அதைப் போலவே இருக்கின்றார்கள் - மற்றும்*

*உண்மை நண்பர்கள் தங்களில் யார் பிறருக்கு அதிகமானதைச் செய்துள்ளோம் என்று கணக்கிட்டுக் கொண்டிருப்பதில்லை. ஜோவையும் (இதை எழுதியவரின் மனைவி) என்னையும் (இதன் எழுத்தாளர்) கர்த்தர் இது போன்ற நூற்றுக்கணக்கான நண்பர்களைக் கொண்டு ஆசீர்வதித்து (மற்றும் தாழ்மைப்படுத்தி) இருக்கிறார். எங்கள் இல்லத்தில் உள்ள ஏறக்குறைய எல்லாப் பொருட்களுமே நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ யாரேனும் ஒரு நண்பரிடம் இருந்த வந்த வெகுமதியாகவே உள்ளன - அவை ஒவ்வொன்றின் பின்னாலும் ஒரு வரலாறு உள்ளது. நாங்கள் எங்கள் இல்லத்தினுள் நடந்து சென்று, அதிலுள்ள படங்களையும், ஓவியங்களையும் பிற அழகுமிக்க பொருட்களையும் கண்ணோக்க முடியும்; வீட்டு உபயோகப் பொருட்களைத் தொட்டுப் பார்க்க முடியும்; அப்போது விலைமதிப்பற்ற நட்புறவினை நினைத்துப் பார்க்கவும் இயலும்.*

## *நட்புறவுக்குப் பரிசோதனை (1 சாமுவேல் 18:5-19:7)*

*ஒவ்வொரு நட்புறவும் விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ பரிசோதனைக்கு உள்ளாகும். புயல்களில் நிலைத்து நிற்கும் நட்புறவுகள் தாம் அதிக அர்த்தமுடையவைகளாக உள்ளன. விரைவிலேயே யோனத்தான் - தாவீது ஆகியோரின் நட்புறவு சோதனைக்குள்ளாகிற்று.*

*தாவீது சவுலின் இல்லத்தில் முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொழுது, அவர் அரண்மனையில் மிகவும் அன்புக்குரியவராயிருந்தார். சில நாட்களிலேயே, தாவீது எங்கோ கிடந்த புல்வெளியிலிருந்து நாட்டில் நன்கு அறியப்பட்ட மனிதர்களில் ஒருவராக ஆனார் (1 சாமு. 18:5, 16, 30). இருந்தாலும் அரசரிடத்தில் அவருக்கிருந்த புகழ்ச்சியானது நிலையற்ற தாயிருந்தது. ஒருநாள் சவுலும் அவரது படையும் இராணுவ வெற்றி யொன்றிலிருந்து திரும்பிய போது பெண்கள், “சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்” (18:7) என்று பாடினார்கள். உடனடியாக சவுலின் இருதயத்திலிருந்த அன்பு (1 சாமு. 16:21) வற்றிப் போயிற்று, அதற்குப் பதிலாக சாவுக்கேதுவான பொறாமை அங்கு இடம் பெற்றது.*

*சவுலின் பொறாமையானது விரைவிலேயே ஒரு கொலை செய்யும் ஆவியாகி நச்சுப் போலச் செயல்பட்டது. அவர் தாவீதைக் கொலை செய்ய, சூழ்ச்சிகளின் ஒரு வரிசையைப் புனைவித்து உருவாக்கினார், ஆனால் அவரது திட்டங்கள் (அவரையே) பின்னோக்கித் தாக்குவதாயின. ஒவ்வொரு திட்டமுமே தாவீதை அழிப்பதற்குப் பதிலாக, தாவீது இன்னும் நன்றாய் அறியப்படுதலையும் அதிகம் மதிக்கப்படுதலையும் விளைவித்தன (1 சாமு. 18:30). கடைசியில் சவுல், காலமானது வெகு நுணக்கமாகக் கடந்து செல்லட்டும் என்று தீர்மானித்தார். அவர் - தமது மகன் யோனத்தான் உட்பட - தமது மிகச் சிறந்த மனிதர்களைத் தம்மைச் சுற்றி ஒன்றுகூட்டி, அவர்களுக்கு “தாவீதைக் கொன்றுபோடு (ங்கள்)” (19:1) என கட்டளையிட்டார். அங்கிருந்த ஒவ்வொரு முகத்திலும் இருந்த திகைப்பையும் பெரும் பீதியையும் உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?*

*தாவீது, நாட்டளவில் ஒரு கதாநாயகராயிருந்தார்!*

*உங்களை நீங்கள் ஒரு கணம் யோனத்தானின் இடத்தில் வைத்துப் பாருங்கள் - நீங்கள் உங்கள் தந்தை மீதான பற்றுறுதிக்கும் உங்கள் நண்பர் மீதான அன்பிற்குமிடையில் கிழித்துப் போடப்படுகின்றீர்கள். இது தாவீதின் மீது யோனத்தான் கொண்டிருந்த நட்புறவிற்கான பல சோதனைகளில் முதலாவதாக இருந்தது.*

*யோனத்தான் தாவீதை எச்சரித்து அவரை ஒளிந்து கொள்ளும்படிக் கூறினார் (19:2, 3). யோனத்தான் தமது நண்பரைத் தமது தந்தையிடம் இருந்து தற்காக்கத் தீர்மானித்தார். அவ்வாறு செய்ததில், யோனத்தான் தம் உயிரைத் தம் கையில் பிடித்துக் கொண்டவராய் இருந்திருப்பார்; இராஜாவின் மகனும் கூட இராஜாவின் கோபத்திற்கு விதிவிலக்காக இருந்ததில்லை (இ.வ. 1 சாமு. 14:44). இருப்பினும் ஒரு உண்மையான நண்பர் ஒருக்காலும் தமது தற்காப்பின்றி - தாம் தனிப்பட்ட வகையில் எவ்வளவு பெரிய விலை கொடுக்க வேண்டியிருப்பினும் - தமது நண்பரின் பெயர் கெடுக்கப் படுவதை அனுமதிப்பதில்லை.*

*அடுத்த நாள் காலையில், சவுலும் யோனத்தானும் ஒன்றாக நடந்து செல்லுகையில், யோனத்தான் பின்வரும் உணர்ச்சிவசமான வேண்டு கோளை விடுத்தார்:*

> *ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய வில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக் கிறதே.*[13] *அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக் கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக் கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன்?*[14] *(19:4, 5) என்றான்.*

*இது கடுமையான நேரமாயிருந்தது: யோனத்தான் தம் கண்களில் கண்ணீருடன் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்; பெருமைமிக்க இராஜாவோ பகுத்தறிவுடன் ஆராய்வதற்குத் தற்காலிகமாகக் கடந்து சென்றார். "சவுல் யோனத்தானுடைய சொல்லைக் கேட்டு: 'அவன் கொலை செய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணை யிட்டான்' " (19:6). யோனத்தான் அகமகிழ்வுடன் தாவீதை திரும்பவும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார் (19:7).*

*நாம் ஒரு சொல் வழக்கைக் கொண்டுள்ளோம்: "தேவையில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்." நான் சிறுவனாயிருந்த பொழுது, இந்தப் பழமொழி என்னைத் திகைப்புக்குள்ளாக்கியது. என்னைப் பொறுத்தமட்டில், "தேவையில் உதவும் நண்பன்" என்ற வார்த்தைகள் "தேவையில் உள்ள நண்பன்" என்றே அர்த்தப்பட்டன. "தேவையில் உள்ள நண்பன் ஏன் உண்மையுள்ள நண்பனாயிருந்தான்" என்பதை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. கடைசியில், "தேவையில் உதவும் நண்பன்"*

என்பது என் நண்பனின் தேவையல்ல ஆனால் எனது தேவை என்பது என் மனதில் உதித்தது. என் சூழ்நிலைகள் மோசமாகும்பொழுதும் கூட, என்னால் ஒன்றும் செய்ய இயலாதபோதும் கூட என் நண்பனாக நிலைத்திருப்பவனே "உண்மையான நண்பனாக" இருக்கின்றான். அந்த வகையான நண்பனே நம் யாவருக்கும் தேவை, நாம் யாவரும் அந்த வகையான நண்பனாகவே இருக்க வேண்டும், மற்றும் யோனத்தான் அந்த வகையான நண்பராகவே இருந்தார். தாவீது தம் பக்கமாக யாரேனும் நிற்க வேண்டிய அவசியத்தில் இருந்தார் - யோனத்தான் அதைச் செய்தார்.

## நட்புறவின் வெளிப்படையான தன்மை (1 சாமுவேல் 19:8-20:42)

தாவீது அரண்மனைக்குத் திரும்பி வந்த பின்பு, மிக விரைவிலேயே சவுல் தாவீதைக் கொல்ல முயற்சி செய்வதில்லை என்ற தம் வாக்குறுதியை மீறினதுமின்றி,[15] (முன்பு இருமுறை செய்தது போல்) ஒரு ஈட்டியைக் கொண்டு தாவீதைக் கொல்ல முயற்சி செய்தார். பட்டென்று பாய்ந்த அந்த ஆயுதம் சுவற்றில் மோதியதைத் தாவீது கண்டபோது, அவர் கருத்தை (நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலை)ப் புரிந்து கொண்டார். அவர் இரவு வேளையில் ஓடிப் போய்விட்டார்.

முதலில் அவர் தம் சொந்த வீட்டிற்குச் சென்றார் (அடுத்த பாடத்தில் காணவும்), பின்பு தம்மைப் பல ஆண்டுகளுக்கு முன்பு இராஜாவாக அபிஷேகம் செய்திருந்த சாமுவேலிடம் சென்றார். அந்த முதிய தீர்க்கதரிசிக்கு எதிராக எவரும் கரங்களை உயர்த்த மாட்டார்கள் என்பது உறுதி. இருப்பினும் சவுல் அவருக்கு(தாவீதிற்கு)ப் பின்னால் - மூன்று குழுக்களாக - கொலையாளிகளை அனுப்பினார், கடைசியாக அவரே (சவுலே) வந்தார். செய்தியாளர்கள் மீதும் சவுலின் மீதும் தேவன் தம் ஆவியை அனுப்பி இடைப்பட்டார். தாவீது மீண்டும் ஓடுகையில், சவுல் தரையில் விழுந்து கிடந்து இசைவுப் பொருத்தமற்ற சொற்றொடர்களை உளறிக் கொண்டு இருந்தார்.[16]

சவுல் தற்காலிகமாக செயலற்றுக் கிடந்த போது, தாவீது தமது நண்பரான யோனத்தானைக் காண்பதற்காக கிபியாவுக்குத் திரும்பிச் சென்றார். ஒருவேளை யோனத்தான், தாவீதுக்கும் சவுலுக்கும் இடையில் மத்தியஸ்தராக மீண்டும் செயல்படக் கூடும். தாவீது தமது இருதயத்தை யோனத்தானிடம் திறந்து காட்டினார். "உம்முடைய தகப்பன் என் பிராணனை வாங்கத் தேடுகிறாரே, நான் செய்தது என்ன? என் அக்கிரமம் என்ன? நான் அவருக்குச் செய்த துரோகம் என்ன?" (1 சாமு. 20:1).

சவுல் மீண்டும் தாவீதைக் கொல்லத் தேடுகிறார் என்பதை யோனத் தானால் நம்ப முடியவில்லை (20:2). அவரது தந்தை "அவன் கொலை செய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு" பரிசுத்தமாக ஆணையிட்டிருந்தாரே (19:6).

இது உண்மை என்று தாவீது வலியுறுத்தினார்: "மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது என்று கர்த்தருடைய ஜீவனை யும்

*உம்முடைய ஜீவனையும் கொண்டு நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்" (20:3).*

*தாவீது தமது சிந்தையில் ஒரு திட்டம் கொண்டிருந்தார். அத்திட்டத்தின் முதன்மை நோக்கம், தாம் ஒரு துன்புறுத்தப்படும் எண்ணம் மட்டும் கொண்டிருந்ததில்லை என்பதை யோனத்தான் நம்பச் செய்ய வேண்டும் என்பதாகக் காணப்படுகின்றது. யோனத்தானுடனான அவரது உறவுமுறை யானது அவர் தம் சிந்தையில் மிக மேன்மையானதாக இருந்தது (20:8).[17] அவர் தம் நண்பரிடத்தில், ''இதோ, நாளைக்கு அமாவாசி, நான் ராஜாவோடே பந்தியிருந்து சாப்பிட வேண்டியதாயிருக்கும்" (20:5) என்று கூறினார். ஒரு மாதத்திற்கு ஒருமுறை ஒரு விசேஷித்த ஓய்வு நாளானது நியாயப்பிரமாணத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது (எண். 28:11-15). சவுல் இந்த விசேஷ நாட்களை, அரசில் வழிநடத்திச் செல்லும் மனிதர்களான யோனத்தான், அப்னேர் மற்றும் தாவீது ஆகியோருடன் தமது "அமைச்சரவைக் கூட்டங்களை" நடத்தப் பயன்படுத்தியிருப்பார் என்பது உறுதி (1 சாமு. 20:25). தாவீது தொடர்ந்து கூறலானார்:*

> *உம்முடைய தகப்பன் என்னைக் குறித்து விசாரித்தால், "தன் ஊராகிய பெத்லெகேமில் தன் குடும்பத்தார் யாவரும் வருஷத்துக்கு ஒரு தரம் பலியிட வருகிறபடியால் தாவீது அவ்விடத்திற்குப் போக என்னிடத்தில் வருந்திக் கேட்டான்" என்று நீர் சொல்லும்.[18] அதற்கு அவர், "நல்லது" என்றால், உம்முடைய அடியானுக்குச் சமாதானம் இருக்கும்; அவருக்கு எரிச்சலுண்டானால்,[19] அவராலே பொல்லாப்புத் தீர்மானப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்வீர் (20:6, 7).*

*யோனத்தான் மிகவும் கவலைப்பட்டு, தாவீதுக்குப் பின்வருமாறு உறுதியளித்தார்:*

> *... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை முன்னிட்டுத் தாவீதை நோக்கி: நான் நாளையாவது மறுநாளிலாவது என் தகப்பனுடைய மனதை அறிந்துகொண்டு, அவர் தாவீதின்மேல் தயவாயிருக்கிறார் என்று கண்டும், அதை அப்போது உமது செவிகளுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, உமக்குச் சொல்லியனுப்பாதிருந்தால், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யோனத்தானுக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர், ஆனாலும் உமக்குத் தீங்கு செய்ய என் தகப்பனுக்குப் பிரியமாயிருந்தால், அதை உமது செவிகளுக்கு வெளிப்படுத்தி, நீர் சமாதானத்தோடே போகும்படிக்கு உம்மை அனுப்பி விடுவேன்; கர்த்தர் என் தகப்பனோடு இருந்ததுபோல், உம்மோடும் இருப்பாராக (20:12, 13).[20]*

*தாவீதைக் கொல்வதற்கு சவுல் அரசின் எல்லா ஆதாரமூலங்களையும் எய்வார் என்றால், கர்த்தர் மட்டுமே அவரை(தாவீதை)க் காப்பாற்ற இயலும்.*

*யோனத்தான் (இவ்விதமாகத்) தாவீதிடம் பதிலுக்குத் தமது இருதயத்தை திறந்து காட்டி, விசுவாசத்தையும் அங்கு ஒளிந்திருந்த பயத்தையும் வெளிப்படுத்தினார். தாவீதுடன் தேவன் இருப்பார் என்பதிலும் தாவீது அடுத்த ராஜாவாவார் என்பதிலும் உறுதியான*

*நம்பிக்கையுடன் இருந்த யோனத்தான் பின்வருமாறு (தாவீதிடம்) கேட்டார்:*

> *மேலும், [நீர் ராஜாவாகும் பொழுது][21] நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு[22] நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயை செய்ய வேண்டியதும் அல்லாமல், கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவரையும் வேர் அறுக்கும்போதும், நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடமாலும் இருக்கவேண்டும் என்றான் (20:14, 15).*

*பதிவேட்டில் உள்ள விவரங்களின்படி, இது ஒன்றுதான் தாவீதிடம் யோனத்தான் கேட்ட வேண்டுகோளாக உள்ளது. தாவீது இதற்கு ஒப்புக் கொண்டார்[23] மற்றும் அவ்விரு நண்பர்களும் ஒருவருக்கொருவர் தாங்கள் செய்திருந்த உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள் (20:16, 17).*

*இதைச் செயல்படுத்துவதற்கு ஒரு விவரம் இன்னும் தாவீது அறிய வேண்டியதாயிருந்தது. அரசரின் ஒற்றர்கள் எவ்விடத்திலும் இருக்கையில், சவுலின் இருதய விருப்பத்தை யோனத்தான் தாவீதிடம் சொல்லக் கூடுவது எவ்வாறு? யோனத்தான் இதற்கு ஒரு ஆலோசனை வைத்திருந்தார்: அன்று தொடங்கி மூன்று நாட்களுக்குத் தாவீது, நன்கு அறியப்பட்ட நில அடையாளக்குறி ஒன்றின் அருகில் (ஏசேல் என்னும் கல்லண்டையில்) ஒளிந்திருக்க வேண்டும். யோனத்தான் அங்கு குறிப்பு வைத்து எய்து பார்க்கப் பழகுவது போல் வருவார். அவர் அம்புகளை எய்யும் வழிமுறையும், தமது வேலைக்காரச் சிறுவனுக்கு அவர் தரும் கட்டளைகளும் சேர்ந்து, செய்தி நல்லதா அல்லது கெட்டதா என்பதைச் சுட்டிக்காட்டும்.*

*யோனத்தானும் தாவீதும் பிரிகையில் யோனத்தான், "இதோ, கர்த்தர் எனக்கும் உமக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி" (20:23) என்று கூறினார்.*

*அடுத்த நாளில், சவுல், யோனத்தான் மற்றும் அப்னேர் ஆகியோர் அரசரின் (உணவு) மேசையில் அமர்ந்தார்கள், "தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது" (20:25). முதல் நாளன்று சவுல், ஒருவேளை தாவீது சடங்காச்சாரத்தின்படி தீட்டாயிருக்கலாம்[24] என்று நினைத்தார் (சடங்காச் சாரத்தின்படி தீட்டானவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொள்வதற்கு ஒருநாள் கால அவகாசம் தேவைப்பட்டது; லேவி. 15:16-23; உபா. 23:10, 11). இருப்பினும், தாவீது இரண்டாம் நாளிலும் வராதிருந்தபோது சவுல் சந்தேகம் கொண்டார். தாவீது இருக்கும் இடம் பற்றிய தகவல் யாருக் கேனும் தெரியும் என்றால், அவர் யோனத்தானாகவே இருக்க முடியும். "அப்பொழுது சவுல்: ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன என்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்டான்" (20:27).*

*யோனத்தான் சொல்லும்படி அவரிடத்தில் தாவீது கூறியவற்றை, ஒரு சில மெருகேற்றுதல்களுடன் அவர் சொன்னார் (20:28, 29).*

*சவுல் கடுங்கோபத்தில் வேகமாய் நிலைமாறினார். அவர் "யோனத்தான் மேல் கோபமூண்டவரானார்" (20:30அ). அவர் தம் மகனிடம் கூச்சலிட்டு அலறினார்:*

*இரண்டகமும் மாறுபாடுமுள்ளவனின் மகனே,[25] நீ உனக்கு வெட்க மாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும்,[26] ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை[27] நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள் வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப் படுவதில்லை, இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா, அவன் சாகவேண்டும் என்றான் (20:30ஆ, 31).*

*தாவீது நம்பிக்கைத் துரோக குற்றம் செய்திருந்தார் அதனால் மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தார் என்பதே சவுலின் மறைமுகமான குறிப்பாயிருந்தது. ராஜாவின் கண்களில் கோபம் தகித்த நிலையில் மற்றும் அவர் இருதயத்தில் கொலை வெறி தாண்டவமாடிய நிலையில் அவருக்கு முன் நிற்பது என்பது யோனத்தான் செய்யக் கூடிய புத்திசாலித்தனமான செயலாக அவருக்குக் காணப்படவில்லை, ஆனால் யோனத்தான் தமது நண்பர் பழிதூற்றப்படுவதை அனுமதிக்க முடியாதவராயிருந்தார். யோனத்தான், "அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான்?" (20:32) என்று கேட்டார்.*

*சவுல் தம் முழுக் கட்டுப்பாட்டையும் இழந்தார். அவர் ஒரு ஈட்டியைக் கொண்டு தாவீதைக் கொல்ல மூன்று தரம் முயற்சி செய்திருந்தார். இப்பொழுது அவர் தம் ஈட்டியைத் தமது சொந்த மகனை நோக்கி வீசினார் (20:33)!*

*யோனத்தான் கோபத்தினால் ஏற்பட்ட படபடப்புடன் சற்று நேரம் அமர்ந்திருந்தார், பின்பு அவர் எழுந்து அந்த அறையில் இருந்து வெளியேறிச் சென்றார் (20:34). அவர் தம் தந்தையார் தம்மைக் கொல்வதற்கு இன்னொரு வாய்ப்பைப் பெறுவதை விரும்பவில்லை. மேலும், அவர் தமது தந்தைக்கு தாம் ஏதேனும் (தீமை) செய்து விடுவோமோ என்றும் பயந்திருக்கலாம்.*

*யோனத்தான் பெருந்துக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டார்.[28] அவரின் மனதில் இருந்த சந்தேகங்கள் யாவும் அகன்று போயிற்று. அது தாவீது கூறியபடியாகவே இருந்தது; அவரின் (யோனத்தானின்) தந்தை அவரது (யோனத்தானின்) நண்பரைக் கொல்லத் தீர்மானமாயிருந்தார்.*

*அடுத்த நாள் காலையில், யோனத்தான் தாவீதைச் சந்திப்பதாகத் தாம் கொடுத்திருந்த வாக்கைக் காத்துக் கொள்வதற்காகக் கனத்த இதயத்துடன் சென்றார். எல்லாம் சாதாரணமாகத் தோன்றும்படியாக அவர் தம் ஆயுதங்களை எடுத்து வரவும், அம்புகளைப் பொறுக்கித் தரவும் தம்முடன் ஒரு பிள்ளையாண்டானை அழைத்துச் சென்றார். (முன்பே) குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடன், அவர் அம்புகள் பலவற்றை எய்தார், பின்பு அந்தப் பிள்ளையாண்டானிடம் அவற்றை எடுத்து வரும்படி கூறினார். அவர் அந்தப் பிள்ளையாண்டானிடம், "அம்பு உனக்கு இன்னும் அப்பால் இருக்கிறது அல்லவா?" (20:37) என்று கூப்பிட்டுக் கேட்டார். அது, தாவீதைக் கொல்ல வேண்டும் என்று சவுல் தமது இருதயத்தில் முடிவு செய்திருந்ததை மற்றும் தப்பிச் செல்வது தவிர தாவீது தேர்ந்து கொள்ளக்கூடியது வேறெதுவும் இல்லை என்பதை அர்த்தப்படுத்த, முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சைகையாக இருந்தது.*

யோனாத்தான் வில்லை மீண்டும் மீண்டும் பின் இழுக்கையில், அவரது கண்கள், அந்தப்பகுதியில் சவுலின் ஒற்றர்கள் யாரேனும் இருக்கின்றார்களா என்று ஆராய்ந்தன.[29] கடைசியில் வேறு எவரும் அங்கு இல்லை என்று திருப்தியடைந்த யோனத்தான், தமது வேலைக்காரப் பிள்ளையாண்டானிடத்தில் தாம் போதிய அளவு பயிற்சி எடுத்துக் கொண்டதாகக் கூறி, அவனை நகருக்குத் திருப்பி அனுப்பி விட்டார் (20:40).

அந்தப் பிள்ளையாண்டான், பார்வைக்கு மறைவான உடனே, தாவீது தாம் ஒளிந்து கொண்டிருந்த இடத்தை விட்டு எழும்பி வந்தார்,[30] அவரது முகம் துக்கத்தினால் திரையிடப்பட்டிருந்தது. அவரும் யோனத்தானும் அந்தச் செய்தியின் மறைமுகக் குறிப்பை பேசப்படாமலேயே அறிந்தார்கள். அவர் தங்கியிருக்க முடியாதிருந்தது மற்றும் யோனத்தான் கிளம்பிச் செல்ல முடியாதிருந்தது. யோனத்தானின் தந்தை தவறானவராயிருந்தார், ஆனால் அவர் இன்னமும் யோனத்தானின் தந்தையாகவே இருந்தார், மற்றும் அவர் அருகில் இவர் இருந்தாக வேண்டும் என்று பற்றுறுதி வற்புறுத்தியது.

இரு நண்பர்களும் பிரிவு சொல்லிக் கொண்டது இருதயத்தைப் பிளக்கும் காட்சியாக இருந்தது.[31] பின்பு அங்கு கண்ணீர் வெடித்தது. வசனம் 41, "அவர்கள் ... அழுதார்கள், தாவீது மிகவும் அழுதான்" என்று கூறுகிறது.

"எந்த நபருடன் இருக்கும் பொழுது நீங்கள் நீங்களாகவே இருக்கத் துணிகின்றீர்களோ, அவரே உங்கள் நண்பர் ஆவார்" என்று யாரோ ஒருவர் கூறினார்.[32] அத்தியாயம் 20ல், யோனத்தானிடம் தாவீது தம் இருதயத்தை ஊற்றியதை நாம் கண்டோம். யோனத்தான் தமது பயத்தை நேர்மையாக வெளிப்படுத்தி தாவீதின் வாக்குறுதியைக் கேட்டுக் கொண்டதை நாம் கண்டோம். இப்பொழுது நாம், இவர்கள் ஒன்றாய் அழுவதைக் காண்கின்றோம் - வளர்ந்த மனிதர்கள், பலம் வாய்ந்த மனிதர்கள், பல இராணுவ எதிர்ப்புகளைச் சந்தித்த நிபுணத்துவம் பெற்றவர்கள் இங்கே கண்ணீர் சிந்தினார்கள். ("உண்மையான மனிதர்கள்" அழுகின்றார்கள்.) வெளிப்படையான தன்மை என்பது உண்மை நட்புறவின் அழகுமிகுந்த விஷயங்களில் ஒன்றாக உள்ளது. நீங்கள் உண்மையான ஒரு நண்பரிடத்தில் நேர்மையுடனும் வெளிப்படையான தன்மையுடனும் இருக்க முடியும், அப்பொழுதும் அவர் உங்களை ஏற்றுக் கொள்வார். உண்மையான நண்பர் உங்கள் தவறுதல்களை அறிகின்றார், எவ்வகையிலும் அவர் உங்களை நேசிக்கின்றார்.

கடைசியில் தாவீதும் யோனத்தானும் பிரிவு சொல்லிக் கொள்ளும் வேளை வந்தது:

> அப்பொழுது யோனத்தான் தாவீதை நோக்கி: "நீர் சமாதானத்தோடே போம், 'கர்த்தர் என்றென்றைக்கும் எனக்கும், உமக்கும், என் சந்ததிக்கும் உமது சந்ததிக்கும், நடுநிற்கும் சாட்சி' என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவரும் ஆணையிட்டுக் கொண்டதை நினைத்துக் கொள்ளும்" என்றான். பின்பு அவன் எழுந்து புறப்பட்டுப் போனான்; யோனத்தானோ பட்டணத்திற்குப் போய் விட்டான் (20:42, 43).

*யோனத்தான் நகரத்திற்குத் திரும்பினார், தீர்க்கப்படாத உறவுமுறைப் பிரச்சனைகளினால் அவர் தம் இருதயம் கனத்திருந்தது. தாவீது தம் உயிர் பற்றிய பயத்தினால் நிறைந்தவராக[33] வனப்பகுதியின் புறம் தம் முகத்தைத் திருப்பினார்.*

## *நட்புறவின் நிலையான உறுதித்தன்மை (1 சாமுவேல் 21:1-23:16)*

*தாவீது முதலாவதாக, ஆசரிப்புக் கூடாரம் வைக்கப்பட்டிருந்த நோப் என்ற இடத்திற்குச் சென்றார். அங்கிருந்து அவர் பெலிஸ்தியாவின் காத் என்ற நகரத்திற்கு ஓடினார். பெலிஸ்தர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள், அவர் அங்கிருந்து மேற்கு யூதேயாவின் அதுல்லாம் கெபிக்குப் போனார். இங்கு அவர் மனக்குறைவு கொண்ட ஒரு கூட்ட மக்களுக்குத் தலைவரானார். அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் சவுல் சற்றும் சளைக்காமல் அவரைத் தேடிச் சென்றார் (1 சாமு. 23:14). கடைசியில் தாவீது மற்றும் அவருடன் இருந்தவர்கள் "ஒரேஸின் சீப் வனப்பகுதியில் இருந்த ஒரு காட்டில்" ஒளிந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், இது யூதேயாவின் மலைகளில் உபசரிப்புத் தன்மையற்ற பகுதியாக இருந்தது (23:15). இங்கு தாவீதும் அவரது நண்பரும் கடைசியாகச் சந்திப்பதை நாம் காண்கின்றோம்.[34]*

*"அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, [ஒரேஸின்] காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய்" (23:16அ). இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். சவுல் தாவீதிற்காக எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தும் அவரைக் கண்டுபிடிக்க இயலாதிருந்தார். ஆயினும் யோனத்தான் ஒரு நாள் காலையில் எழுந்து, "இனியும் இதை என்னால் பொறுக்க இயலாது. நான் தாவீதைக் காண வேண்டும்" என்று தமக்குள் கூறிக்கொண்டார். எனவே இவர் தமது இரவுப் பயணப்பையில் (தேவையான) ஒரு சில பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு, "[ஒரேஸின்] காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போனார்." அது, யோனத்தான் தமக்குச் சொந்தமாக ஒற்றர் முறைமையைக் கொண்டிருந்தார் என்றும் தாவீதுக்கு என்ன நேரிட்டுக் கொண்டிருந்தது என்று அவ்வப்போது அவர் தகவல் பெற்றார் என்றும் எனக்கு கூறுகின்றது. தாவீது எங்கிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார், அவரிடம் இவர் சென்றார்.*

*நட்புறவு என்பது அதைப் போலவே உள்ளது. நீங்கள் உங்கள் நண்பரை விட்டுப் பல மைல்கள் தூரம் பிரிந்திருக்கலாம், ஆனால் அவர் உங்கள் நினைவுகளிலும் பாசப் பிணைப்புகளிலும் நிலைத்திருக்கிறார். நீங்கள் (வாழ்த்து) அட்டைகளை, கடிதங்களை, அல்லது தொலைபேசி அழைப்புக் களைப் பரிமாறிக்கொள்ளுகின்றீர்கள். நீங்கள் அவருடன் தொடர்பு கொண்டிருக்கின்றீர்கள்; அவரது வாழ்வில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். அவர் அகம் மகிழும் போது நீங்கள் அகம் மகிழ்கின்றீர்கள் அவர் அழும்போது நீங்கள் அழுகின்றீர்கள் (ரோமர் 12:15). பின்பு, நீங்கள் இனியும் பிரிந்து இருக்க இயலாது என்ற நிலை வரும்போது,*

*நீங்கள் சற்று நேரமாகிலும் அவரைக் காண்பதற்கான வழி ஒன்றைக் கண்டறிகின்றீர்கள்.*

*இந்தப் பயணத்தில் யோனத்தான் எதிர்கொண்டிருந்த அபாயத்தை நாம் மிகையாய் வலியுறுத்திக் கூற இயலாது. சவுல், தாவீதுடன் நட்புற வாயிருக்கும் எவரையும் கொலை செய்யத் தயங்காதிருப்பதைச் செயல் விளக்கப்படுத்தியிருந்தார்,[35] அவர் தம் சொந்த மகனைக் கூடக் கொலை செய்யத் தயங்காதிருப்பதையும் செயல்விளக்கப்படுத்தியிருந்தார். யோனத்தான் தாவீதைக் காண்பதற்குத் தமது உயிரைப் பணயம் வைத்த வராய்ச் சென்றார். அதுவே நண்பரைப் பற்றிய எல்லாமுமாக உள்ளது. "ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை" என்று இயேசு சொன்னார் (யோவா. 15:13).*

## *நட்புறவின் உற்சாகமூட்டுதல் (1 சாமுவேல் 23:16-18)*

*யோனத்தான் தாவீதிடத்திற்குச் சென்றது ஏன்? அவரது நட்புறவை மகிழ்வுடன் அனுபவிக்கத்தான் என்று நான் உறுதியாய் நம்புகின்றேன் - ஆனால் அதைக்காட்டிலும் அதிகமான சில காரணங்களும் இருந்தன. நண்பர்கள் தங்கள் நண்பர்களிடம் இருக்கையில் உணர்வுப்பூர்வமானவர் களாய் இருப்பார்கள் மற்றும் தாவீது ஒவ்வொரு நாளும் தாம் சவுலினால் கொல்லப்படுவோம் என்ற பயத்துடன் வாழ்வது அவருக்கு எவ்வளவு ஊக்கம் இழக்கச் செய்வதாய் இருந்திருக்கும் என்று யோனத்தான் அறிந்தார். அவரை உற்சாகப்படுத்துவதற்காகவே யோனத்தான் தாவீதிடம் சென்றார். "அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையை திடப்படுத்தி" (23:16). "திடப்படுத்தி" என்பது மூல மொழியில்: "அவரது கையைத் திடப்படுத்தி" (KJVயில் காணவும்) என்ற நேரடியான அர்த்தம் தருவதாக உள்ளது. [ஆங்கிலத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு சிறப்பாக உள்ளது], இது "நிலைப்படுத்துதல், பெலப் படுத்துதல், உற்சாகமூட்டுதல்" என்று அர்த்தம் தருகின்ற எபிரெயச் சொல் வழக்காக உள்ளது.*

*யோனத்தான் "தேவனுக்குள் அவன் தாவீதின் கையைத் திடப் படுத்தினார்." அவர் தேவனுடைய திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகள் குறித்துத் தாவீதைப் பெலப்படுத்தினார். தாவீதைத் தேவன் வெற்றி யடையச் செய்வார் என்ற தமது உறுதிப்பாட்டையும், தமது தந்தையின் முயற்சிகள் யாவும் தோல்வியை தழுவும் என்பதையும் யோனத்தான் தாவீதுடன் பகிர்ந்து கொண்டார். "நீர் பயப்பட வேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்க மாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் இராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்;[36] அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்" (23:17; 1 சாமு. 24:16-20ஐக் காணவும்).*

*அவ்வகையான நண்பர்கள் விசேஷித்தவர்களாய் இருக்கின்றார்கள்! வெளிச்சக் கண்ணோக்கும், மேலே தூக்கி விடும் இயல்பும், உற்சாக மூட்டுதலும் கொண்ட மக்கள் உங்களைச் சுற்றிலும் இருத்தலை நீங்கள் மகிழ்வுடன் அனுபவித்ததில்லையா?[37] நண்பர்கள் ஒருவருக்கொருவர் கட்டியெழுப்புகின்றனர். இன்று நான் இருதயம் புண்பட்டிருந்தால், என் நண்பர் என்னை மேலே தூக்குகின்றார். நாளை என் நண்பர் உற்சாகம் இழந்து நிற்கலாம். அப்பொழுது நான் அவரை இதப்படுத்துவேன். ஒருவர் பிறருக்கு உதவுதல் என்பதே நட்புறவு பற்றிய முழு விஷயமாக உள்ளது.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, "கர்த்தருக்குள் நமது கைகளைத் திடப் படுத்த" - கர்த்தருக்குள் நாம் விசுவாசமாயிருக்கும்படி நம்மை உற்சாகப் படுத்துபவர்களாயிருக்க, நமக்கு யோனத்தான் போன்ற நண்பர்கள் தேவை. (நாம்) கர்த்தருக்கு ஊழியம் செய்வதை சில நண்பர்கள் சுலபமாக்கு கின்றார்கள் (அப். 10:24), மற்றும் சில "நண்பர்கள்" அதைக் கடினமாக்கு கின்றார்கள் (2 சாமு. 13:3ஐக் கவனிக்கவும்). "ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்" என்று பவுல் எச்சரித்தார் (1 கொரி. 15:33). உங்கள் நண்பர்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுங்கள்; நீங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுகின்றீர்கள் என்பதைத் தீர்மானம் செய்ய அவர்கள் உதவக் கூடும்.*

*இப்பொழுது, (யோனத்தானும் தாவீதும்) பிரிவு சொல்லிக் கொண்ட தின் கவலையும் கண்ணீரும் நமது கற்பனைக்கு விடப்பட்டுள்ளது. யோனத்தானும் தாவீதும் தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்; பின்பு, "தாவீது காட்டில் இருந்து விட்டான்; யோனத் தானோ தன் வீட்டிற்குப் போனான்" (1 சாமு. 23:18). அவர்கள் மீண்டும் ஒருக்காலும் ஒருவர் ஒருவரைக் காணாதபடிக்குப் பிரிந்து சென்றார்கள்.*

## நட்புறவின் வேதனை
## (2 சாமுவேல் 1)

*நீங்கள் உங்களை மற்றொருவருக்கு வெளிப்படுத்துகின்ற பொழுது, உங்களை நீங்கள் எளிதில் தாக்கப்படக் கூடியவராக்கிக் கொள்ளுகின்றீர் கள். உங்கள் இருதயத்தை இடர்ப்பாட்டிற்குள்ளாக்குகையில், அது நசுக்கப்பட்டு விடக் கூடும். இருப்பினும் இதற்கு மாற்றாக இருக்கும் ஒரே செயல் என்னவென்றால், உங்களுடைய இருதயத்தை காற்றில்லாத, தூசிமிகுந்த இடத்தில் அடைத்து வைத்து அது மூச்சுத் திணறி இறக்கும்படி அனுமதித்தல் என்பதுதான். உங்கள் இருதயம் வேதனையை உணராதிருக் கலாம், ஆனால் அது மகிழ்ச்சியையும் உணராது. உங்கள் வாழ்வை ஒருவர் மற்றவருக்கு ஒப்புக்கொடுங்கள்; வாழ்வதற்கு இது ஒன்றுதான் வழி.*

*தாவீது, யோனத்தான் ஆகியோரின் கண்ணீரை நாம் கண்டோம்; பெருந்துயர் கொண்ட பிரிவு சொல்லிக் கொள்ளுதலை நாம் கண்டோம். யோனத்தான் தாவீது ஆகியோரின் கசப்பும் இனிப்பும் கொண்ட நட்புறவின் கடைசி அத்தியாயத்திற்கு நாம் வருகையில், இது வேதனை மிகுந்த காட்சியாக உள்ளது.*

*தாவீதும் அவரது குழுவில் இருந்த மனிதர்களும், இஸ்ரவேலர்களுக்கும் பெலிஸ்தர்களுக்குமிடையே பேரழிவு தரும் யுத்தம் மூண்ட செய்தியைக் கேள்விப்பட்ட பொழுது, அவர்கள் இன்னும் அமலேக்கியர்களுடன் தாங்கள் செய்திருந்த சண்டையிலிருந்து மீளாதிருந்தார்கள். செய்தி கொண்டு வந்த மனிதனிடம் தாவீது பயம் நிறைந்தவராய், "நடந்த செய்தி என்ன?" (1:4அ) என்று கேட்டார்.*

*அந்த இளைஞனின் வார்த்தைகள் தாவீதின் இருதயத்தில் கத்திபோல் இறங்கின: "ஜனங்கள் யுத்தத்தைவிட்டு முறிந்தோடிப் போனார்கள்; ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்தார்கள்" (1:4ஆ).*

*தாவீது அதை நம்புவதற்கு விரும்பவில்லை (1:5). இருப்பினும் அந்த மனிதன் கண்ணால் கண்ட சாட்சியத்தைக் கொடுத்தபோது, அவர் தமது நண்பர் இறந்துபோனதை அறிந்தார்.*

> *அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, சவுலும், அவன் குமாரனாகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் புலம்பி அழுது, சாயங்கால மட்டும் உபவாசமாயிருந்தார்கள் (1:11, 12).*

*தாவீது எழுதிய அழகிய நினைவுப்பாடல் ஒன்று 1:19-27ல் காணப் படுகிறது. அந்தப் புலம்பலில் சவுல் மற்றும் யோனத்தான் ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டனர் - ஆனால் தாவீதின் அடிப்படை நோக்கம் அதன் தலைப்பில் வெளிப்படுகின்றது: "வில்லின் பாடல்" (1:18). வில் என்பது யோனத்தானுடைய சிறப்பு அடையாளமாயிருந்தது, அது சவுலின் சிறப்பு அடையாளமாயிருந்ததில்லை. பளிங்கிலும் கல்லிலும் பல நினைவுச் சின்னங்கள் நண்பர்களுக்கென்று எழுப்பப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றில் எதுவும் யோனத்தானுக்காகத் தாவீது எழுதிய இரங்கற்பாடலை விஞ்சி நிற்க இயலாது.*

*அந்தப் பாடலில் தாவீது, யோனத்தான் மற்றும் அவரது தந்தை (சவுல்) ஆகியோரின் இராணுவ பராக்கிரமத்தைக் கொண்டாடினார் (1:22). அவர் யோனாத்தானின் உண்மைத் தன்மையையும் இவர் (யோனத்தான்) தம் தந்தை மீது கொண்டிருந்த பற்றுறுதியையும் பாராட்டினார் (1:23). இருப்பினும் எல்லாவற்றிற்கும் மேலாக தாவீது தமது இழப்பைப் பற்றிப் பாடினார்:*

> *போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே!*
> *யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே!*
> *என் சகோதரனாகிய யோனத்தானே! உனக்காக நான்*
> *வியாகுலப்படுகிறேன்;*
> *நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரிய*
> *மாயிருந்தது;*
> *ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது.[38]*
> *பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே! ... (1:25-27).*

ஆம், நீங்கள் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்தும் பொழுது, வேதனையில் உங்களை வெளிப்படுத்துகின்றீர்கள். இருப்பினும், தாவீது தமது இருதயம் உடைந்து போயிருந்ததால் யோனத்தானுடனான தமது நட்புறவைக் குறித்துப் புலம்பி அழவில்லை. மாறாக, அவர் அந்த நட்புறவைக் கொண்டாடி, அதன் விலைமதிப்பற்ற நினைவுகளைத் தமது இருதயத்தில் சேர்த்து வைத்துக் கொண்டார். இது ஒன்றுதான் வாழ்வதற்கான வழி என்று நான் மீண்டும் கூறுகின்றேன்.

## முடிவுரை

இந்தப் பாடம் நட்புறவுக்கான புகழுரையாக உள்ளது, ஆனால் இது அதைக் காட்டிலும் மேலானதாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். இது நம் யாவருக்கும் ஒரு அறைகூவலாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நகரம் ஒன்றின் வறிய பகுதிக்குப் பார்வையிடுவதற்காகக் காரோட்டிச் சென்ற பிரசங்கியார் ஒருவரின் கதையை நான் கேட்டிருக்கின்றேன்.[39] அவர் தாம் சென்றிருந்த வீட்டை விட்டு வெளியே வருகையில், கந்தலான உடையணிந்திருந்த ஒரு சிறுவன் தமது புதிய காரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்தப் பையன், “மிஸ்டர், இது ஒரு கார்!” என்றான். சற்று விளக்கம் தேவை என்று நினைத்த பிரசங்கியார், “இதைப்போன்ற ஒரு காரை என்னால் வாங்க இயலாது, ஆனால் நான் எனது வேலையை(ஊழியத்தை)ச் செய்யக் கூடுவதற்காக, கார் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள என் நண்பர் ஒருவர் இதை எனக்குப் பரிசளித்தார்” என்று கூறினார். சற்று நேரம் யோசனை செய்த பின் அந்தப் பையன், “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்றான்.

இந்தக் கதையை நான் முதன் முதலாகக் கேட்ட பொழுது, அந்தப் பையனின் பதிலானது, “எனக்கு அவர் போன்ற நண்பர் ஒருவர் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்பதாயிருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்ற வார்த்தைகள் என் இருதயத்தை அசைத்தன.

“உறுதிப்பாடு”, “சுயநலமின்மை”, “வரவிருக்கும் சோதனைகளைச் சந்திக்க பெலன்”, “வெளிப்படையான தன்மை”, “உறுதியுடன் நிலைத்திருத்தல்”, மற்றும் “உற்சாகமூட்டுதல்” என்பவை போன்ற வார்த்தைகளுடன் நான் உண்மையான நட்புறவை விவரித்திருக்கையில், நாம் ஒருவேளை, “எனக்கு அவர் போன்ற நண்பர் ஒருவர் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்று நினைத்திருக்கலாம். அப்படியென்றால் நாம் நமது சிந்தனையை, “நான், அவர் போன்ற ஒரு நண்பனாக இருக்க முடிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” என்பதற்கு மாற்றிக் கொள்வோமாக.

இந்தப்பாடத்தின் தொடக்கத்தில், இதைப் படிக்கும் யாவருக்கும் இது

உதவியாயிருக்கும், சிறப்பாக நட்புறவின்மையுடன் இருப்பதாக நினைக்கின்ற யாவருக்கும் இது உதவியாக இருக்கும் என்ற எனது நம்பிக்கையை நான் விளக்கப்படுத்தியிருந்தேன். உங்களுக்கு நான் இரண்டு விஷயங்களைக் கூற என்னை அனுமதியுங்கள்: முதலாவது, உங்களுக்கு நண்பர்கள் இல்லையென்றால், நண்பர் தேவைப்படுகின்ற இன்னொரு வரைக் கண்டறிந்து, (நீங்கள் அவருக்கு) நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருந்த வகையிலான நண்பராயிருங்கள். ''சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்''[40] என்பது இன்னமும் உண்மையானதாகவே உள்ளது.

இரண்டாவது (மற்றும் மிகவும் முக்கியமானது), இங்கு விவரிக்கப் பட்ட பண்புகள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவரை நாம் யாவரும் நண்பராகக் கொண்டிருக்க முடியும் என்பதை நினைவில் வையுங்கள். அவர், "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதர்" என்று அழைக்கப்பட்டார் (மத். 11:19; லூக். 7:34), அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைத் தமது "சிநேகிதர்கள்" என்று அழைத்தார் (லூக். 12:4; யோவா. 15:15). அவர் உங்கள் நண்பராயிருக்கின்றாரா? அவர், "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்'' (யோவா. 15:14) என்று கூறியுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள். நாம் வேறு நண்பர்கள் எத்தனை பேரைக் கொண்டிருப்பினும், அல்லது கொண்டிராதிருப்பினும், இவர் நாம் கொண்டிருக்க வேண்டிய நண்பராக இருக்கின்றார்!

---

## காட்சி - உதவிக் குறிப்புகள்

"நட்புறவு" என்ற வார்த்தையைக் கொண்ட ஒரு பெரிய பலகையானது இந்தப் பாடம் நடத்தும் நேரம் முழுவதிலும் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது செயல் விளைவுள்ளதாயிருக்கும். அதிகம் விரிவான அணுகுமுறை விரும்பப்படுகிறது என்றால், பின்வரும் பெரிய எழுத்துக்கள் கொண்ட ஒரு வரைபடத்தைத் தயாரித்துக் கொள்ளுங்கள்:

| |
|---|
| |

நட்புறவு

பின்பு, பாடத்தின் பிரதான கருத்துக்களை (உட் தலைப்புக்களை) மேலுள்ள வெற்றிடத்தில் செருகுவதற்கேதுவாக பின்வரும் வார்த்தைகளைக் கொண்ட அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்: "உறுதிப்பாடுள்ள'; ''சுயநலமின்மையான''; ''சோதனையுள்ள''; ''வெளிப்படையான தன்மையுள்ள"; "உறுதியாய் நிலைத்திருத்தலான"; "உற்சாகமூட்டுதலான"; "வேதனையுள்ள."

குறிப்புகள்

[1]இந்த முதல் பத்தியில் உள்ள வேத வசனங்கள் தவிர, பிற மேற்கோள்கள் யாவையும் Frank Crane, *A Friend Like You* (Heartland Samplers, Inc., 1991), devotional calendar என்ற இதழில் இருந்து எடுக்கப்பட்டவையாகும். [2]A book currently on the market is titled *The Friendless American Male.* [3]தாவீது சவுலுக்கு முறையாக சுரமண்டலம் வாசித்துக் கொண்டிருந்தார் என்றால் (இ.வ. 1 சாமு. 16:23; 17:15), தாவீது யார் என்று சவுல் அறிந்திராதது ஏன்? என்ற கேள்வி எழுகின்றது. சாத்தியமான பல விளக்கங்கள் உள்ளன. தாவீது சவுலுக் காகச் சுரமண்டலத்தைக் கடைசியாக வாசித்திருந்து சில நாட்கள் கடந்திருக்கலாம் - மற்றும் தாவீதின் தோற்றம் மாறியிருக்கலாம். (பின்னாளில் அவர் தாடியைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது - 1 சாமுவேல் 21:13; இதை அவர் ஏற்கனவே வளர்க்கத் தொடங்கியிருக்கலாம்.) பெரும்பாலும் சவுல் ஏறக்குறைய மனத்தெளிவு அற்றவராய் இருந்ததால், இது அவரது நினைவு சக்தி பாதிக்கப்படக் காரணமாயிருந் திருக்கலாம். இருப்பினும், இந்தப் பாடத்தின் முக்கிய பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள விளக்கம் அநேகமாக மிகச் சிறந்ததாக இருக்கின்றது: சவுல், தாவீதை யார் என்று கேட்கவில்லை, ஆனால் அவரது தந்தை யார் என்றே கேட்டார், இது தாவீதை அரண்மனைக்குள் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்த நிகழ்வாக இருந்தது. [4]தாவீதின் தந்தை யார் என்பதை சவுல் முன்னரே கேள்விப்பட்டிருந்தார் (1 சாமு. 16:18-22). இருப்பினும், பெயர்களை (விசேஷமாக ஒவ்வொரு நாளும் நான் புழங்கியிராத பெயர்களை) நினைவில் கொள்வதில் பிரச்சனைகளைக் கொண்டுள்ளவன் என்ற வகையில் நான், சவுல் இதை எவ்வாறு மறந்திருக்கக் கூடும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. [5]இது, சவுல் "ஈசாயினிடத்தில் ஆள் அனுப்பி, தாவீது எனக்கு முன்பாக நிற்கட்டும்; என் கண்களில் அவனுக்குத் தயவு கிடைத்தது" (1 சாமு. 16:22) என்று கூறிய வேளையாக இருக்கலாம். [6]1 சாமுவேல் 18:3ஐ 1 சாமுவேல் 20:16 உடன் ஒப்பிடவும். [7]தாவீது தம்மைத் தொடர்ந்து யோனத்தானின் "அடியான்" என்று குறிப்பிட்டார் என்பதைக் கவனிக்கவும். [8]1 சாமுவேல் 20:23ஐக் காணவும். இது "கர்த்தருடைய உடன்படிக்கை" என்றும் அழைக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும் (1 சாமு. 20:8). [9]1 சாமுவேல் 13:22ஐக் கவனிக்கவும் - இருப்பினும், இஸ்ரவேலர்கள் பெலிஸ்தர்களுடனான தங்கள் அடுத்தடுத்த வெற்றிகளில் பட்டயங்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வார்கள் என்று யூகிக்கப்படுகின்றது. பின்னாட்களில் தாவீதும் அவரது மனிதர்களும் குறைந்தது நானூறு பட்டயங்கள் வைத்திருந்தனர் (1 சாமு. 25:13). [10]நாம் இன்றைய நாட்களில் பயன்படுத்தும், "தான் போட்டிருந்த சட்டையைக் கழற்றி அவனுக்குக் கொடுத்து விட்டான்" என்ற சொற்றொடர், யோனத்தானின் செயலை விவரிக்கப் பயன்படலாம்.

[11]யோனத்தான் தாவீதுக்கு உடைமைகளைக் கொடுத்தார்; கொடுப்பதற்கென்று எதுவும் கொண்டிராத தாவீது, தம்மையே கொடுத்தார். [12]James Burton Coffman, *Commentary on First Samuel* (Abilene, Tex.: ACU Press, 1992), 215. [13]தாவீது செய்த ஒவ்வொன்றும் சவுலுக்கு சாதகமாகப் பிரதிபலித்தது. [14]யோனாத்தானின் கேள்வியில், பேசப்படாத ஆனால் புரிந்து கொள்ளப்பட்ட விவாதம் ஒன்றிருந்தது. சவுல் காரணமின்றி தாவீதைக் கொலை செய்வாரென்றால், அது நாடு முழுவதிலும் அமைதியின்மையை உண்டாக்கி விடும். எவரொருவரும் தாம் பாதுகாப்பாக இருப்பதாகக் கருத மாட்டார்கள். [15]சவுல் இந்த வாக்குறுதியளித்ததில் உண்மையுடன் செயல்பட்டாரா என்று சிலர் கேள்வியெழுப்புகின்றார்கள். [16]வேத வசனமானது, [சவுலும்] "தானும் ... சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லி ..." (1 சாமு. 19:24) என்று கூறுகின்றது. இருப்பினும், "தீர்க்கதரிசனம்" என்ற வார்த்தையானது எதிர்மறையான கருத்திலும் பயன்படுத்தப் படக் கூடும். இதே

*வார்த்தையானது மூலமொழியில், 1 சாமுவேல் 18:10ல் பயன்படுத்தப்பட்டு,* NASB *யில் "பைத்தியம் போல் உளறினான்"* (raved) *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:* "he raved in the midst of the house." *சவுல் நாயோதியில் இருபத்து நான்கு மணி நேரம் "நிர்வாணமாய்க்" கிடந்த வேளையில் உண்மையில் என்ன செய்தார் என்பது பற்றிச் சில கேள்விகள் உள்ளன.* [17]*அவர் (யோனத்தான்) சவுலுடன் எந்த நிலையில் நின்றார் என்பதைத் தாவீது தமது சொந்த சிந்தையில் தெளிவு படுத்திக் கொள்ளுதல் என்பது இந்தத் திட்டத்தின் துணை நோக்கமாயிருந்தது. அவரது வாழ்வின் மீதான இந்த முயற்சிகள் சவுலின் தற்காலிகப் பைத்திய சிந்தையினால் விளைந்ததாயிருக்கலாம், இவைகள் உண்மையில் சவுலின் பகுத்தறிவுள்ள விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தாமல் இருக்கலாம். ஒருவேளை, அவர் (யோனத்தான்) இதற்கு முன் தாவீதைச் சவுல் கொல்ல முயன்ற வேளையில் அரசரிடத்தில் அவரை (தாவீதை) ஒப்புரவாக்கியது போல மீண்டும் செய்யக் கூடியவராயிருக்கலாம். (அமாவாசையன்று தாவீது வரவேண்டும் என்று சவுல் எதிர்பார்த்திருந்ததால்* [*1 சாமு. 20:26, 27*], *சவுல் "தற்காலிகப் பைத்திய நிலையின் காரணத்தினால் குற்றம் சுமராதபடி" வேண்டுகோள் விடுக்கத் திட்டமிட்டிருக்கலாம் என்று காணப்படுகின்றது.* [18]*தாவீதின் வாழ்க்கையைப் பற்றி நாம் படிக்கையில், பொய்கூறுதல் மற்றும் பிற நேர்மையற்ற தன்மை ஆகியவற்றைக் காண்போம். (ஆனால்) இதிலிருந்து நாம், தேவன் பொய்யுரைத்தலை அங்கீகரிக்கின்றார் என்று யூகித்து விடக் கூடாது. ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் தாங்கள் கூறிய எல்லாவற்றிற்கும் அங்கீகாரப் போர்வை அளிக்காமல், என்ன நடந்தன என்பதைப் பதிவு செய்துள்ளார்கள்.* [19]NIV*யில்,* "if he loses his temper" *(அவர் உணர்வுக் கட்டுப்பாட்டை இழந்தா ரென்றால்) என்றுள்ளது. சவுல் நிச்சயமாகவே அவ்வாறே ஆனார்!* [20]*யோனத்தான், "கர்த்தர் என் தகப்பனோடு இருந்தது போல, உம்மோடும் இருப்பாராக" என்றார். யோனத்தான், தமது தந்தையின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் - அவர் அரசராயிராதபடி புறக்கணிக்கப்படுவதற்கு முன்பு - யெகோவா அவருடன் (சவுலுடன்) இருந்த வகை முறையைக் குறிப்பிட்டார்.*

[21]*துரதிர்ஷ்டவசமாக யோனத்தான், தாவீது ராஜாவானபொழுது உயிருடன் இருக்கவில்லை.* [22]*புதிதாக முடி சூட்டப்படும் அரசர், உடனடியாக சாத்தியக் கூறுள்ள எல்லா எதிரிகளையும் கொன்று போடுதல் என்பது பொதுவான வழக்கமாக இருந்தது.* [23]*இந்த வேண்டுகோளில் யோனத்தான் தமது "வீட்டை* [*வீட்டாரை*] *உள்ளடக்கினார். தாவீது தாம் யோனத்தானுக்குக் கொடுத்த வாக்குறுதியை பின்னாட்களில் அவரது மகனைக் கனப்படுத்தியதன் மூலமாகவும் (2 சாமு. 9:7) அவரை மரணிக்கச் செய்யாதபடி காத்துக் கொண்டதன் மூலமாகவும் (2 சாமு. 21:7) நினைவுகூர்ந்தார்.* [24]*சடங்காச்சாரமாக தீட்டாயிருத்தல் என்பது இஸ்ரவேலர்கள் மதரீதியான பண்டிகைகளில் கலந்து கொள்வதைத் தடை செய்தது (லேவி. 7:20, 21 முதலியன).* [25]*"மகனே" என்பது "இயல்பில் பங்கேற்கின்ற" என்று அர்த்தம் தருகின்ற எபிரெய மரபுச் சொல் ஆகும். இந்தச் சொல்விளக்கம் "நிலை பிறழ்வுபட்ட கலகக்காரனே" என்று நேரடி அர்த்தம் தருகின்றது. ஆயினும், அதனைக் காட்டிலும் அதிக அவமானப் படுத்துவதாகவும் இது உள்ளது. இது இன்றைய நாட்களில் "பெண் நாய்க்குப் பிறந்தவனே" என்று நேரடியாக அர்த்தம் தரும் கெட்ட வார்த்தையுடன் ஒப்பிடப்படலாம், ஆனால் இது மாபெரும் அவமானங்களில் ஒன்றாக உள்ளது* (see LB paraphrase of this verse). [26]*யோனத்தான் பிறந்தபோது அவரது தாயின் நிர்வாணம் வெளிப்பட்டதால், இந்தச் சொற்றொடர் "உன்னைப் பெற்றதற்கு உன் தாய் வெட்கக் கேட்டிற் குள்ளானாள்" என்று அர்த்தப்படலாம். அல்லது இந்தச் சொல் விளக்கம், பதவி நீக்கப்பட்ட அரசரின் மனைவிகள் அவருக்கு அடுத்து அரசராகுபவருக்கு மனைவி களானார்கள் என்ற உண்மையைக் குறிப்பிடுவதாகவும்*

*இருக்கலாம் (2 சாமு. 12:18ஐக் காணவும்). [27]செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில், "நீ நட்புறவை ஏற்படுத்திக் கொண்டாய்" என்றுள்ளது (*NEB *யில் காணவும்).* NIV *யில் "நீ (தாவீதின்) பக்கமாயிருக்கின்றாய்" என்றுள்ளது. [28]யோனத்தானால் உண்ண முடியாமல் போனதாக 1 சாமுவேல் 20:34 கூறுகின்றது. [29]யாரேனும் கவனிக்கின்றார்கள் என்று யோனத்தான் கண்டிருந்தால், தாவீது அபாயத்திற்குள்ளாகாதபடி, அவர் தம் வேலைக்காரனுடன் நகருக்குத் திரும்பிச் சென்றிருப்பார் என்பதில் ஐயம் எதுவும் இல்லை - மற்றும் இதைத் தொடர்ந்து வருகின்ற மனம் நெகிழச் செய்யும் காட்சியை நாம் பெற்றிருக்க மாட்டோம். [30]தாவீது "மூன்று முறை வணங்கியதாக" 1 சாமுவேல் 20:41 குறிப்பிடுகிறது. இது அரசரின் மகன் என்ற வகையில் யோனத்தானுக்கு அளிக்கப்பட்ட மரியாதை யாக இருக்கலாம் (1 சாமு. 24:8ஐக் காணவும்) அல்லது தேவன் மீதான மரியாதை யினிமித்தம் ஆனதாக இருக்கலாம் ("கர்த்தருடைய சித்தம் செய்யப்படுவதாக") - அல்லது இது இவ்விரு நோக்கங்களையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.*

*[31]இன்றைய நாட்களில் உலகத்தின் பல பகுதிகளில் இன்னமும் நடைமுறையில் இருப்பது போலவே, அந்த நாட்களில் கன்னத்தில் முத்தமிடுதல் என்பது நடைமுறை யில் காணப்பட்ட வாழ்த்தாக இருந்தது. [32]*Frank Crane, *A Friend Like You* (Heartland Samplers, Inc., 1991), devotional calendar. *[33]1 சாமுவேல் 23:17; 27:1 முதலியவற்றைக் கவனிக்கவும். தாவீது தம் உயிருக்குப் பயந்ததினால் ஓடினார் என்று பல வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. கொடுக்கப்பட்ட இரு வசனங்களும் மாதிரிகளாக உள்ளன. [34]தாவீதைத் துரத்திச் செல்வதில் யோனத்தான் பங்கேற்காதபடியினால், 20ம் அதிகாரத்தின் முடிவில் இருந்து 23ம் அதிகாரத்தின் இந்தக் காட்சி வரையிலும் அவரைப் பற்றிய குறிப்பு எதுவும் நமக்குக் கிடைப்பதில்லை. [35]நோபில் இருந்த ஆசாரியர்கள் தாவீதுக்கு உதவியதால் அவர்களைச் சவுல் கொலை செய்வித்திருந்தார். [36]"நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்" என்ற சொற்றொடர் ஒரு வேண்டுகோளாயிருப்பதில்லை, ஆனால் இது ஒரு வாக்குறுதியாக உள்ளது. என்னதான் வந்தாலும், யோனத்தான் இரண்டாம் இடத்தில் இருந்தாலும் அதில் தாம் திருப்தியடைவதாகவும், தொடர்ந்து அவரை ஆதரிப்பதாகவும் தாவீதிடம் வாக்குறுதியளித்தார். [37]பிரசங்கி 4:9-12ல் நாம் பிறரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுகின்ற பலம் பற்றிப் பிரசங்கியார் பேசினார். [38]தேவன் ஓரினச் சேர்க்கையை அங்கீகரிக்கின்றார் என்று நிரூபிக்க விரும்புகின்ற ஒரு சிலர், தாவீதும் யோனத்தானு ம் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்று "நிரூபிக்க" இந்த வசனப் பகுதியைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றார்கள். ஆயினும் தாவீது, யோனத்தானின் அன்பினுடைய சுயநலமற்ற இயல்பை(யே) இங்கு குறிப்பிடுகின்றார், அந்த அன்பு பாலுறவு பற்றிய இயல்பு அல்ல. [39]நான் ஏற்கனவே வேறொரு பாடத்தில் இந்தக் கதையைக் குறிப்பிட்டுள்ளேன், இருப்பினும் இவ்விடத்தில் இது பொருத்தமாக இருப்பதால், மீண்டும் இதைப் பயன்படுத்த முடிவு செய்தேன். [40]நீதிமொழி 18:24. இந்த வசனத்தைப் பொறுத்தமட்டில் பாடரீதியான சிரமங்கள் உள்ளன. நவீன மொழிபெயர்ப்பாளர்கள் பலர், இதை மிகவும் மாறுபட்ட வகையில் மொழிபெயர்க்கின்றார்கள். இதன் ஒரு பகுதியோ அல்லது பாரம்பரியமோ எதுவாயிருந்தாலும், இதை நான் ஒரு உண்மையான பழமொழி என்ற வகையில் உள்ளடக்கியிருக்கிறேன்.*